செய்தி வெளியீடு எண் 263/2020 நாள் 16.07.2020

<u>குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான புதிய "உத்யம்" பதிவுச் சான்றிதழ் அறிமுகம்</u>

தற்பொழுது நாட்டில் உள்ள அனைத்து குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் உத்யோக் ஆதார் என்னும் பதிவறிக்கை பதிவு செய்து பல்வேறு தேவைகளுக்கு பயன்படுத்துகின்றன. இம்முறையானது மத்திய அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டு ஆன்லைன் வழியே வழங்கப்பட்டு வந்தது. தற்பொழுது ஜீலை முதல் தேதியிலிருந்து இம்முறையானது மாற்றம் செய்யப்பட்டு உத்யம் பதிவு என்னும் புதிய முறையினை மத்திய அரசு அறிமுகம் செய்துள்ளது. அதன்படி ஒரு நிறுவனத்தின் எந்திர தளவாடம் அல்லது உபகரணங்களின் மதிப்பு ஒரு கோடிக்கு மிகாமலும் விற்று முதல் (Turn Over) 5 கோடிக்கு மிகாமலும் உள்ள நிறுவனங்கள் குறு நிறுவனங்கள் எனவும் எந்திர தளவாடம் அல்லது உபகரணங்களின் மதிப்பு 10 கோடிக்கு மிகாமலும் விற்று முதல் (Turn Over) 50 கோடிக்கு மிகாமலும் உள்ள நிறுவனங்கள் சிறு நிறுவனங்கள் எனவும் எந்திர தளவாடம் அல்லது உபகரணங்களின் மதிப்பு 50 கோடிக்கு மிகாமலும் விற்று முதல் (Turn Over) 250 கோடிக்கு மிகாமலும் உள்ள நிறுவனங்கள் நடுத்தர நிறுவனங்கள் எனவும் வகைப்படுத்தப்பட;டுள்ளன.

இப்புதிய உத்யம் பதிவானது udyamregistration.gov.in என்ற இணையதளத்தின் வழியாக பதிவு செய்து உத்யம் பதிவெண்ணையும் பதிவுச் சான்றிதழையும் நிறுவனங்கள் பெற்றுக் கொள்ளலாம். இப்பதிவு செய்ய கட்டணம் ஏதும் கிடையாது. ஏற்கனவே உத்யோக் ஆதார் பதிவறிக்கை பெற்றுள்ள நிறுவனங்கள் 2021 மார்ச் 31க்குள் உத்யம் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

புதியதாக உத்யம் பதிவுசெய்யும் நிறுவனங்கள் வருகிற 2021 ஏப்ரல் 1 முதல் ஜிஎஸ்டி மற்றும் பான் (Pan) எண்ணை கட்டாயமாக வைத்திருக்க வேண்டும்.

எனவே அனைத்து குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களும் தற்பொழுது மத்திய அரசால் வழங்கப்படும் உத்யம் பதிவு செய்து சான்றிதழ் பெற்றுக் கொள்ளவேண்டுமாறும் மேலும் விவரங்களை பெற காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட தொழில் மைய பொது மேலாளரை 044 - 27238837, 27236686, 27238551 என்ற தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு பயன்பெறலாம். இத்தகவலை காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், காஞ்சிபுரம்.